வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 10.4.2025 நேரம் மாலை 6.10 மணி

-------------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- 26/11 மும்பை தீவிரவாத தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டதாக கருதப்படும் Tahawwur ராணா என்ற தீவிரவாதி அமெரிக்காவில் இருந்து, இன்று மதியம் டெல்லி கொண்டு வரப்பட்டார்.
- புதுச்சேரியில் மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு ஜெயின் சமய கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.
- காரைக்காலில் பொது மக்கள் குறை தீர்ப்பு முகாம் இம்மாதம் 17-ஆம் தேதி நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
- லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற உள்ள 2028 ஒலிம்பிக் போட்டிகளில், டி-20 கிரிக்கெட் போட்டிகள் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

***<u>ராணா-இந்தியா</u>***

2008-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ஆம் தேதி, மும்பையில் கடல் மார்கமாக வந்து நட்சத்திர ஒட்டல்கள் மற்றும் சத்ரபதி சிவாஜி மகாராஜ் ரயில் நிலையத்தில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில் ஏராளமான பொது மக்கள், வெளிநாட்டினர் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இந்த 26/11 மும்பை தீவிரவாத தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டதாக கருதப்படும் Tahawwur ராணா என்ற தீவிரவாதி, இன்று மதியம் டெல்லி கொண்டு வரப்பட்டார். வழக்கு ஒன்றில் கைதாகி அமெரிக்க சிறையில் இருந்த ராணா, இந்திய அரசின் தொடர் முயற்சியால் அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்டு இன்று மதியம் இந்தியா கொண்டு வரப்பட்டுள்ளார். இதுபற்றி சமூக ஊடகத்தில்

பதிவிட்டுள்ள மத்திய அமைச்சர் திரு பியுஷ் கோயல், பிரதமர் திரு நரேந்திர மோடியின் உறுதியான நடவடிக்கைகள் மூலம், மும்பை தீவிரவாத தாக்குதலில் குற்றம் சாட்டப்பட்டு இந்தியா கொண்டு வரப்பட்டுள்ள ராணா கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார் என்று குறிப்பிட்டுள்ளார். ராணா டெல்லி கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், தேசிய புலனாய்வு நிறுவனத்தின் தலைமையகம், பட்டியாலா நீதிமன்றம் மற்றும் தேசிய தலைநகரின் ஒருசில பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

முன்னதாக, தாம் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவதை எதிர்த்து, அமெரிக்க உச்சநீதிமன்றத்தில் ராணா தாக்கல் செய்திருந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதை அடுத்து, அவர் இந்தியா கொண்டு வரப்பட்டுள்ளார்.

ராணா நாடு கடத்தப்பட்டு இந்தியா கொண்டு வரப்படுவதை முன்னிட்டு, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, நேற்று தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், இது பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்று குறிப்பிட்டார். இந்திய மக்களுக்கு தீங்கு விளைவித்த அனைவரையும் இந்தியாவிற்கு கொண்டு வருவது மத்திய அரசின் கடமை என்றும், இந்திய நீதிமன்றத்தில் Tahawwur ராணா வழக்கு விசாரணையை எதிர்கொள்ள இருப்பது இந்திய அரசின் மகத்தான சாதனை என்றும் திரு அமித் ஷா குறிப்பிட்டார்.

***குடியரசு தலைவர்-ஸ்லோவோக்கியா***

ஸ்லோவோக்கியா நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ள குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு அங்கு நடைபெற்ற ராமாயணம் தொடர்பான பொம்மலாட்ட நிகழ்ச்சியை கண்டு ரசித்தார். Lenka Mukova என்ற இந்திய அபிமானி ஒருவர் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பள்ளிக் குழந்தைகளுக்கு பொம்மலாட்ட கலை மூலமாக கல்வி பயிற்று

வித்து வருகிறார். இந்திய கலாச்சாரத்தை ஸ்லோவோக்கியா மக்களுக்கு, கொண்டு சேர்ப்பதுடன், ராமாயணத்தின் ஆழ்ந்த மாண்புகளையும், சிறப்பு அம்சங்களையும் வெளிப்படுத்தும் விதமாக இந்த பொம்மலாட்ட நிகழ்ச்சி அமைந்திருந்தது. விசித்திர கதைகளில் ஒளிந்திருக்கும் அழகு - ஸ்லோவோக்கியா குழந்தைகளின் கண்ணோட்டத்தில் இந்தியா பற்றிய பார்வை என்ற ஓவியக் கண்காட்சியையும் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பார்வையிட்டார். இந்தியா மற்றும் ஸ்லோவோக்கியா நாடுகளுக்கு இடையிலான பிணைப்பை வலுப்படுத்தி, கலாச்சார புரிதலை வளர்க்கும் விதத்தில் இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன.

*பிரதமர்-மகாவீர் ஜெயந்தி*

மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி, பகவான் மகாவீரரின் காலத்தால் அழியாத போதனைகளை சுட்டிக் காட்டி, தமது சொந்த வாழ்க்கையில் பகவான் மகாவீரரின் போதனைகள் ஏற்படுத்திய ஆழமான தாக்கங்களை நினைவு கூர்ந்துள்ளார்.

பகவான் மகாவீரரின் போதனைகள் மற்றும் ஜெயின் சமூகத்துடன் பிரதமரின் நீண்டகால ஆன்மிகப் பிணைப்பை எடுத்துக் காட்டும், மோடி ஆவண காப்பக எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவிற்கு, பதில் அளித்து, பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் பிரதமர் இவ்வாறு நினைவு கூர்ந்துள்ளார். மேலும், பகவான் மகாவீரரின் கொள்கைகள், தாம் உள்பட எண்ணற்ற மக்களுக்கு பெரிதும் உத்வேகம் அளித்துள்ளன என்றும், மகாவீரரின் எண்ணங்கள் அமைதியான மற்றும் கருணை உள்ள பூமியை உருவாக்குவதற்கான வழியை காட்டுவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

***மகாவீர் ஜெயந்தி***

மகாவீர் ஜெயந்தி இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுவதை முன்னிட்டு, புதுச்சேரி 45 அடி சாலை மற்றும் அண்ணாசாலையில் உள்ள ஜெயின் சமய கோவில்களில் நடைபெற்ற சிறப்பு வழிபாடுகளில் ஜெயின் சமூகத்தினர் கலந்து கொண்டனர். புதுவை அண்ணாசாலை ஜெயின் கோவிலில் இருந்து இன்று காலை புறப்பட்ட மகாவீரர் தேர் பவனியில் ஏராளமான ஜெயின் சமூகத்தினர் கலந்து கொண்டனர். தேர் பவனியின் போது பஜனைப் பாடல்கள் பாடப் பட்டன. மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு இன்று புதுச்சேரியில் அனைத்து மதுபானக் கடைகளும் அடைக்கப்பட்டு இருந்தன.

***சைபர் கமாண்டோ***

மத்திய உள்துறை அமைச்சகம் சைபர் குற்றங்களை தடுக்கும் வகையில் கமாண்டோ என்னும் சிறப்பு சைபர் பாதுகாப்பு பிரிவை உருவாக்கி உள்ளது. நாடு முழுவதிலும் இருந்து 346 பேர் தேர்வு செய்யப்பட்டு 6 மாத பயிற்சிக்கு பின்னர், அந்தந்த மாநில சைபர் குற்றப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளனர். புதுச்சேரியில் இருந்து தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி முடித்த 10 பேருக்கு அதற்கான சான்றிதழை உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், நேற்று டிஜிபி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் வழங்கினார். டிஜிபி ஷாலினி சிங், டிஐஜி சத்திய சுந்தரம், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் நாரா சைதன்யா உள்ளிட்ட காவல்துறை உயர் அதிகாரிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பின்னர் உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், சட்டம்-ஒழுங்கு, போக்குவரத்து உள்ளிட்ட பிரச்சனைகள் தொடர்பாக காவல் துறை உயர் அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய உள்துறை அமைச்சர்

திரு நமச்சிவாயம், சைபர் குற்றங்களைத் தடுப்பது, போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காண்பது, காவல்துறைக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி கொடுப்பது உள்ளிட்டவை குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ……………… (வாய்ஸ்)

<u>*காரைக்கால்-முகாம்*</u>

காரைக்காலில் பொது மக்கள் குறை தீர்ப்பு முகாம் இம்மாதம் 17-ஆம் தேதி நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தெரிவித்துள்ளது. ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதி நடைபெறும் பொது மக்கள் குறை தீர்ப்பு முகாம், தமிழ் வருடப் பிறப்பு மற்றும் தொடர் விடுமுறைகள் காரணமாக இம்மாதம் 17-ஆம் தேதி நடைபெறும் என காரைக்கால் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் செயலர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். அனைத்து துறை அதிகாரிகள் முன்னிலையில், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 12 மணி வரை முகாம் நடைபெறும் என்றும் இந்த குறை தீர்ப்பு முகாமில் பொது மக்கள் பங்கேற்று பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

<u>*காரைக்கால்-நீட்*</u>

காரைக்கால் மாவட்டத்தில் நீட் 2025 நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பித்த அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளி மாணவர்களுக்கான நீட் முதுகலை துரிதப் பயிற்சி வகுப்புகள் துவங்கி உள்ளன. மாணவர்களுக்கு தந்தை பெரியார் மேல்நிலைப் பள்ளியிலும், மாணவிகளுக்கு அன்னை தெரேசா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. நீட் நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கள் இந்த பயிற்சி வகுப்புகளில் பங்கேற்று பயன் அடையுமாறு காரைக்கால் மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

**<u>கிரிக்கெட்-லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்</u>**

லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற உள்ள 2028 ஒலிம்பிக் போட்டிகளில், டி-20 கிரிக்கெட் போட்டிகள் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆடவர் பிரிவில் 6 கிரிக்கெட் அணிகளும், மகளிர் பிரிவில் 6 கிரிக்கெட் அணிகளும் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க உள்ளன. லாஸ் ஏஞ்சல்ஸ் 2028 ஒலிம்பிக் போட்டிகளின் நிகழ்வுகள் மற்றும் தடகள ஒதுக்கீடுகளுக்கு, நேற்று நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் குழுவின் நிர்வாக வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. கிரிக்கெட் போட்டிகள் நடைபெற உள்ள மைதானங்கள் பற்றிய விவரங்கள் இனிமேல் தான் தீர்மானிக்கப்பட உள்ளன. நடைபெற இருக்கும் 2028 ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட் உள்ளிட்ட 5 புதிய விளையாட்டுகள் சேர்க்கப்பட உள்ளன.

**<u>கிரிக்கெட்</u>**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு பெங்களூருவில் நடைபெற உள்ள ஆட்டத்தில் பெங்களூரு-டில்லி அணிகள் மோத உள்ளன.

**<u>வானிலை</u>**

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய, தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, வடக்கு திசையில் நகர்ந்து மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் நேற்று மாலை காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலு குறைந்தது. அது, இன்று காலை காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக அதே பகுதியில் நிலவுகிறது. அடுத்த 12 மணி நேரத்தில் இது, வடக்கு, வடகிழக்கு திசையில் நகர்ந்து மத்திய வங்க கடல் பகுதிகளில் படிப்படியாக வலு விழக்க கூடும். இதனால் இன்று தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இடி மின்னலுடன்

கூடிய லேசானது முதல்  மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மகளிர் ஹாக்கி  (8)*

இந்திய மகளிர் ஹாக்கி அணியினர் ஆஸ்திரேலியாவிற்கு இம்மாதம் 26-ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 4-ஆம் தேதி வரை சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றனர். இந்தப் பயணத்தின் போது 5 போட்டித் தொடர்களில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் மோத உள்ளன. இம்மாதம் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் ஆஸ்திரேலிய- ஏ  அணியுடன் 2 போட்டிகளில் விளையாடும் இந்திய மகளிர் ஹாக்கி அணியினர், ஆஸ்திரேலிய சீனியர் அணியுடன் மே 1, 3, மற்றும் 4-ஆம் தேதிகளில் 3 போட்டிகளில் பங்கேற்கின்றனர்.